**ஊநி2/4878/2016**

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
தூத்துக்குடி மாவட்டம்,
தூத்துக்குடி 628 101.

நாள் : 21.12.2016.

**பத்திரிக்கை செய்தி**

மேன்மைமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் WP (MD) 16485/2015 இல் 20.12.2016 அன்று வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின்படி, தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 10.01.2017 அன்று இது தொடர்பான வழக்கு மீண்டும் விசாரனைக்கு வர உள்ளதால், அதற்குள் சீமைக்கருவேல மரங்களை அகற்றும் பணியினை முடித்து மேன்மைமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டியுள்ளது.

மேன்மைமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளையால் வழங்கப்பட்டுள்ள மேற்படி தீர்ப்பில், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியார் நிலங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்களையும் அகற்றுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட

1. **அரசு சார்ந்த நிறுவனங்கள்** (வஉசி துறைமுக பொறுப்புக் கழகம், கன நீர் ஆலை, என்டிபிஎல், தூத்துக்குடி அனல் மின் நிலையம், சிப்காட், இந்திய உப்பு நிறுவனம், இரயில்வே துறை போன்றவை)
2. **தனியார் நிறுவனங்கள்** (ஸ்பிக், டாக், ஸ்டெர்லைட், தனியார் மின் உற்பத்தி நிலையங்கள், ஸ்டாக் யார்டுகள் போன்றவை)
3. மற்றும் **தனியார் நிலங்களில்**

உள்ள சீமைக்கருவேல மரங்களை 31.12.2016 க்குள் தாங்களாகவே அகற்றி மேன்மைமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளையின் தீர்ப்பினை செயல்படுத்த மாவட்ட நிர்வாகத்திற்கு உதவ கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் குறைவதை தடுக்கவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் முடியும் என்பதால், பொதுமக்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பொறுப்பாளர்கள் சீமைக்கருவேல மரங்களை தாங்களாகவே அகற்றி சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைக்கவும், மேன்மைமிகு உயர்நீதி மன்றத்தின் ஆணையை நடைமுறைப்படுத்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
தூத்துக்குடி மாவட்டம்.